சுருக்கம்

திட்டங்கள் – மாநிலத் திட்டம் – ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் (CSIDS) – 2015–2016–ஆம் ஆண்டு திட்டத்தை செயல்படுத்துதல் – நிதி ஒப்பளிப்பு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் – ஏற்பளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி–1) துறை

அரசாணை(நிலை) எண்.72 நாள்:29.04.2015

படிக்கப்பட்டவை.

1. அரசாணை (நிலை) எண்.101, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள் 02.12.2011.
2. அரசாணை (நிலை) எண்.46, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள் 14.06.2012.
3. அரசாணை (நிலை) எண்.81, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள் 16.07.2013.
4. அரசாணை (நிலை) எண்.82, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–1) துறை, நாள் 7.7.2014.
5. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்குநரின் கடிதம் எண் 7354/2015/ SSS(CSIDS) நாள் 9.4.2015.
6. அரசாணை (நிலை) எண்.69, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா–1) துறை, நாள் 28.04.2015.

----

ஆணை:

ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப் பள்ளிகளுக்குத் தேவையான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளான புதிய கட்டடங்கள், சமையல் கூடம், குடிநீர் வழங்குதல், கழிப்பறைகள், இதர பிற வசதிகளை ஏற்படுத்திடும் குறிக்கோளுடன் 2011–2012–ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. மேலும் தற்போதுள்ள அமைப்புகளில் பழுதுநீக்கம் மற்றும் புதுப்பித்தல் பணிகளையும் தேவைப்படின் இத்திட்டத்தின்கீழ் எடுத்துச் செய்யலாம்.

2. மேலே படிக்கப்பட்டவை ஒன்று முதல் நான்கு வரை காணப்படும் அரசாணைகளில் ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை 2011–2012, 2012–2013, 2013–2014 மற்றும் 2014–2015 ஆம் ஆண்டுகளில் செயல்படுத்திட ஒவ்வொரு ஆண்டும் 100 கோடி ரூபாய் நிதி

ஒதுக்கம் செய்து தேவையான ஆணைகள், விரிவான வழிகாட்டு நெறிமுறைகளுடன் வெளியிடப்பட்டன.

3. மேலே ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், 2015–2016–ஆம் ஆண்டில் இத்திட்டத்தை செயல்படுத்திட கருத்துரு மற்றும் வரைவு வழிகாட்டி நெறிமுறைகளை அனுப்பி, 2015–2016–ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்திட தேவையான ரூ.100 கோடியை, ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளின் மாநில நிதி ஆணைய மான்யத்திலிருந்து முறையே 2:1 விகிதத்தில் (அதாவது) ரூ.67 கோடியை ஊராட்சி ஒன்றியப் பங்கிலிருந்தும் மற்றும் எஞ்சிய தொகையான ரூ.33 கோடியை நிதியை மாவட்ட ஊராட்சிகளின் பங்கிலிருந்தும் பெற்று 8 தவணைகளில் மாவட்டங்களுக்கு விடுவிப்பு செய்யலாம் எனக் குறிப்பிட்டு, 2015–2016–ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்திட தேவையான ஆணைகளை வழிகாட்டு நெறிமுறைகளுடன் வெளியிடுமாறு அரசினைக் கோரியுள்ளார்.

4. மேலே 6–ல் படிக்கப்பட்ட அரசாணையில், ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு, 2015–2016–ஆம் ஆண்டிற்கான மாநில நிதி ஆணைய மானியம் விடுவிப்பு செய்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து அவற்றை ஏற்றுக்கொள்ளலாம் என முடிவு செய்து, கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(i) 2015–2016–ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்த, 2015–2016–ஆம் ஆண்டிற்கு ஊரக உள்ளாட்சி அமைப்புகளின் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்காக மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து முறையே 2:1 என்ற விகித்தில் ரூ.100 கோடி கீழ் குறிப்பிட்டவாறு ஒப்பளிப்பு செய்யப்படுகிறது:–

| | | |
|---|---|---|
| ஊராட்சி ஒன்றியங்களின் பங்கு | – | ரூ.67 கோடி |
| மாவட்ட ஊராட்சிகளின் பங்கு | – | ரூ.33 கோடி |

(ii) மேலே 6–ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மாநில நிதி ஆணைய மானியத்திலிருந்து மேற்குறிப்பிட்ட நிதியை பிடித்தம் செய்து 8 தவணைகளில் மாவட்டங்களுக்கு விடுவிப்பு செய்திட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

(iii) 2015–2016–ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாக விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் இவ்வரசாணையின் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன.

6) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.24876/Fin(RD)/2015, நாள் 29.04.2015–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (சென்னை நீங்கலாக).
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்
(ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் வாயிலாக).
முதன்மை தலைமை கணக்கு அலுவலர், சென்னை–9/18/35.
சம்பளக் கணக்கு அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து கருவூல அலுவலகங்கள்.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா–1) துறை, சென்னை–9.
(தொடர் நடவடிக்கைக்காக)
தேசிய தகவல் தொடர்பு மையம், சென்னை–9.

<u>நகல்</u>
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (வரவு–செலவு– I / வரவு–செலவு– II / ஊ.வ/நிதி ஆணையம்– IV)
துறை, சென்னை– 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## அரசாணை (நிலை) எண்.72, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (மா.அதி.1) துறை, நாள் 29.04.2015

## இணைப்பு

## 2015 - 16 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட செயல்பாட்டிற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

**1. பள்ளிகள் தேர்வு செய்தல்**

ஊரகப் பகுதிகளிலுள்ள ஊராட்சி ஒன்றிய ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிகளுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளான புதிய பள்ளி கட்டடங்கள் கட்டுதல், சமையலறை, கழிவறை, குடிநீர் வசதி செய்தல் மற்றும் பள்ளி கட்டடங்கள், சமையலறை, கழிவறை மற்றும் குடிநீர் வசதிகளை பழுது பார்த்தல் மற்றும் புதுப்பித்தல் போன்றவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும். 2015–16ஆம் ஆண்டு தாய் திட்டத்தினை செயல்படுத்திடத் தேர்வு செய்யப்பட்ட கிராம ஊராட்சிகளில் உள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளை அனைவரும் பெறுவதற்கு, தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை இந்தியாவிலேயே சிறப்பாக தமிழகம் பெற வேண்டும் என்பது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்கு 2023–ன் முக்கிய 10 மைய இலக்குகளில் ஒன்றாகும். எனவே, அனைத்துப் பள்ளிகளிலும், சுகாதார வசதிகளை செய்து தருவது ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். அனைத்து ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் கழிப்பறை வசதி செய்து தரப்பட்டுள்ளது, ஊராட்சி ஒன்றிய பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிகையை கணக்கில் கொண்டு மேலும் புதிதாக கூடுதல் கழிப்பறை தேவைப்படின் தாய் திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் மட்டுமல்லாமல் அனைத்து கிராமங்களிலும் நடைமுறையில் உள்ள ஏதேனும் ஒரு திட்டத்தின் நிதியை ஒருங்கிணைத்தும் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். எனினும் பள்ளியின் இதர தேவைகள் 2015–16ம் ஆண்டு தாய் திட்டம் செயல்படுத்தப்படும் கிராமங்களில் மட்டும்தான் எடுத்துச் செய்யப்பட வேண்டும்.

அதே போல் பேரூராட்சிகள், நகராட்சிகளில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய பள்ளிகள் அனைத்திலும் (தாய் திட்ட கிராமங்கள் என்பது இதற்குப் பொருந்தாது) அனைத்து தேவைகளும் எடுத்துக் கொள்ளப்படலாம்.

## 2. அடிப்படை வசதிகள் மற்றும் இதர பணிகளின் வகைபாடு

இத்திட்டத்தின் கீழ், கீழ்காணும் நான்கு வகையான அடிப்படை வசதிகள் மற்றம் இதர பணிகள் மேற்கொள்ளப்படும்.

### I. பள்ளி கட்டடங்கள்

**அ. புதிய கட்டடம்**

- ❖ புதிய பள்ளி கட்டடம் அப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் கட்டப்படவேண்டும். (தோராயமாக ஒரு மாணவருக்கு 9 சதுர அடி)
- ❖ ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்தால் தெரிவிக்கப்பட்ட வரைபடத்தின் அடிப்படையில் புதிய பள்ளி கட்டடம், கான்கிரிட் கூரையுடன் தண்ணீர் கசியாத வகையில் தட்டோடு மற்றும் இதர வசதிகளுடன், கட்டப்படுதல் வேண்டும்.
- ❖ பள்ளி வளாகத்தில் உள்ள காலி இடத்தில் புதிய பள்ளிக் கட்டடம் அமைக்கப்படுதல் வேண்டும்.
- ❖ பள்ளிக் கட்டடம் கட்டத் தேவையான காலி இடம் இல்லாத நிலையில், ஏற்கனவே உள்ள கான்கிரிட் பள்ளிக் கட்டடத்தின் உறுதித் தன்மை சம்பந்தப்பட்ட மாவட்ட செயற்பொறியாளரால் (ஊ.வ) உறுதி செய்யப்பட்ட பின்னர் அக்கட்டடத்தின் மேல்தளத்தில் புதிய கட்டடம் கட்டப்படலாம்.
- ❖ புதியதாக கட்டப்படும் பள்ளி கட்டடங்களுக்கு மழைநீர் சேகரிப்பு அமைப்பு கண்டிப்பாக ஏற்படுத்தப்படவேண்டும்.

**ஆ. ஏற்கனவே உள்ள பள்ளி கட்டடம் பழுதுபார்த்தல்**

- ❖ பள்ளி கட்டடங்களுக்கு வெள்ளை / கலர் வர்ணம் பூசுதல் (கடந்த 3 வருடங்களுக்குள் வெள்ளை / கலர் வர்ணம் பூசிய கட்டடங்கள் தவிர)
- ❖ கான்கிரிட் கூரைகள் பழுது பார்த்தல் (தட்டோடு பதித்தல் அல்லது தண்ணீர் கசியாத வகையான பணிகள், இதர பிற பணிகள்) மற்றும் மழைநீர் சேகரிப்பு அமைப்பு பழுதடைந்த/இல்லாத இடங்களில் ஏற்படுத்தி தருதல்.
- ❖ தரையை பழுது பார்த்தல் / பழுதடைந்த தரையை மாற்றியமைத்தல்
- ❖ கரும்பலகைகளுக்கு வர்ணம் பூசுதல்
- ❖ பழுதடைந்த கதவுகள் மற்றும் சன்னல்களை பழுதுபார்த்தல்/மாற்றியமைத்தல்

- ❖ சிறிதளவு பழுதடைந்த ஓடுகள் / உத்திரம் / ஓடுகள் வேயப்பட்ட கட்டடங்களிலுள்ள பட்டிகள் பழுது பார்த்தல்
- ❖ கட்டட சுவர்களில் ஏற்பட்ட விரிசல்களை பழுதுபார்த்தல்

கடந்த 3 வருடங்களுக்குள் பழுது நீக்கம் செய்யப்பட்ட பள்ளிக் கட்டடங்களை பழுது பார்க்க தேர்வு செய்யக்கூடாது.

## II. சமையலறை கட்டடம்

- ❖ சமையலறைக்கூடம் இல்லாத பள்ளிகளில் புதிய சமையலறை கூடத்தை மழைநீர் சேகரிப்பு அமைப்புடன் கட்டுதல்.
- ❖ பழுதடைந்த நிலையிலுள்ள சமையலறை கூடம் பழுது பார்த்தல் / புதுப்பித்தல் பணி மேற்கொள்ளுதல்.
- ❖ புதிய சமையலறை கூடம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம் மூலம் வடிவமைக்கப்பட்ட மாதிரி வரைபடத்தின் அடிப்படையில் கட்டப்பட வேண்டும்.
- ❖ ஏற்கெனவே உள்ள சமையலறை கட்டடத்தில் போதுமான இடம் இல்லாதிருப்பின் மதிய உணவுத் திட்டத்திற்குத் தேவையான அரிசி, தானியங்கள் மற்றும் இதர உபகரணங்களை இருப்பு வைத்துக் கொள்ள கூடுதல் அறைகள் / இருப்பறைகள் கட்டலாம்.

## III. குடிநீர் வசதிகள்

- ❖ பள்ளிகளில் ஏற்கனவே உள்ள குடிநீர் வசதி அமைப்புகள் பழுதடைந்து இருப்பின், அவை பழுது பார்க்கப்பட்டு பள்ளிக்கு குடிநீர் வழங்கப்படும்.
- ❖ தேவை ஏற்படின் குடிநீர்க்குழாய் நீட்டிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.
- ❖ புதிய குடிநீர் இணைப்புகள் தேவைப்படின் அருகிலுள்ள ஊராட்சி குடிநீர் இணைப்புகளிலிருந்து குடிநீர் சேகரிப்பு தொட்டியுடன் கூடிய வசதி செய்யலாம்.
- ❖ அவசியமான இடங்களில் புதிய ஆழ்துளை கிணறு (கைப்பம்பு இணைப்புடன்) அமைக்கலாம். எங்கெங்கு சாத்தியமோ அங்கெல்லாம் மழைநீர் சேகரிப்பு தொட்டிகள் கட்டி அதன்மேல் கைபம்பு அமைக்கலாம்.

## IV. கழிப்பறைகள்

- ❖ அனைத்து ஊராட்சி ஒன்றிய பள்ளிகளிலும் மாணவ மாணவியருக்குத் தனித்தனியே போதுமான அளவில் கழிப்பறைகள் இருக்க வேண்டும். பெரும்பாலான பள்ளிகளில், முழுசுகாதார இயக்கம் (TSC) / நிர்மல் பாரத் அபியான் (NBA) மற்றும் மற்ற திட்டங்களான

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் (MPLADS), சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் (MLACDS), மூலம் கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. எனவே ஏற்கெனவே கட்டப்பட்டு பயன்பாடின்றி உள்ள கழிப்பறைகளில் பழுதுநீக்கம் / புதுப்பித்தல் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளலாம்.

- ஏற்கனவே உள்ள கழிப்பறைகளின் கான்கிரிட் கூரை, சுவர்கள், தரை வடிகால்கள், உட்கார்ந்திருக்கக்கூடிய மலக்குழிகள், நச்சுத்தடை மலக்குழிகள் இதர பணிகள் போன்றவை பழுது நீக்கம் / புதுப்பித்தல் செய்யலாம்.
- தேவைப்படின், கழிப்பறைகளில் தரை மற்றும் உட்புற சுவர்களில் துப்புரவு ஓடுகள் ஒட்டலாம்.
- நடுநிலைப்பள்ளிகளில் அமைந்துள்ள கழிப்பறையில் மாணவிகளின் வசதிக்காக எரியூட்டிகள் அமைக்கப்படலாம்.
- குழாய் / நீர் தேக்க தொட்டி அமைத்து அதன் மூலம் கழிப்பறைகளில் தண்ணீர் வசதி ஏற்படுத்தி தரவேண்டும்.
- கழிப்பறைகளுக்கு வெள்ளை / கலர் வர்ணம் பூசலாம். ( 3 வருடங்களுக்குள் வெள்ளை / கலர் வர்ணம் பூசப்பட்ட கட்டடங்கள் தவிர)
- புதிய கழிப்பறைகள் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் வெவ்வேறு நேரத்தில் பயன்படுத்தக்கூடிய எண்ணிக்கைக்கேற்ப கட்டப்படும். இருப்பினும் மேலே கூறியவாறு ஏற்கெனவே உள்ள கழிப்பறைகளில் பழுதுநீக்கம் / புதுப்பித்தல் செய்த பிறகு மாணவர்களின் எண்ணிக்கை அடிப்படையில் தேவை இருந்தால் மட்டுமே புதிய கழிப்றைகள் கட்டப்படவேண்டும்.

**V. தடுப்பு சுவர்கள்**

தேவையின் அடிப்படையிலும், நிதி இருப்பின் அடிப்படையிலும் பள்ளிகளுக்கு தடுப்பு சுவர்கள் கட்டலாம்.

**3. பணிகள் தெரிவு செய்தல் மற்றும் இறுதி செய்தல்**

**A.** பணிகளை தேர்வு செய்து, இறுதி செய்கையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளை கடைபிடித்தல் வேண்டும்.

- ஒவ்வொரு பள்ளிக்கும் தேவைப்படும் பள்ளி கட்டடம், கழிப்பறைகள், தண்ணீர் வசதி, சுற்று சுவர் மற்றும் சமையலறைக்கூடம் விவரங்களை தாய் திட்டம் கணக்கெடுப்பு படிவம் 6(ஆ)–ல் உள்ள விவரங்களிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். 2015–16ஆம் ஆண்டு தாய் திட்டத்தின்கீழ்

தேர்வு செய்யப்பட்ட குக்கிராமங்களில் உள்ள ஆரம்ப மற்றும் நடுநிலைப்பள்ளிக்கு அத்தியாவசியமாக செய்ய வேண்டிய தேவைகளை இது குறிப்பிட்டு காட்டும்.

- ❖ மேற்படி பட்டியலை, அடிப்படை பட்டியலாக கொண்டு கீழ்க்கண்ட நபர்கள் அடங்கிய குழு, ஒவ்வொரு பள்ளியையும் ஆய்வு செய்து மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளின் விவரப் பட்டியலை தயார் செய்ய வேண்டும்.

1. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)
2. உதவி பொறியாளர் (ஊ.வ) / இளநிலை பொறியாளர்
3. பள்ளி தலைமையாசிரியர்

இறுதி செய்யப்பட்ட பணிகளின் விவர பட்டியல் (புதியது மற்றும் பழுது நீக்கம்) மாவட்டங்களுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரால் "மதிப்பீட்டு தாள்" ஆக தெரிவிக்கப்படும்.

**B.** ஒரு குறிப்பிட்ட பள்ளி கட்டடம், சமையலறைகூடம் அல்லது கழிப்பறை பாழடைந்த நிலையில் உள்ளதை முழுவதுமாக மாற்றியமைக்கப்பட வேண்டும் என குழு கருதினால், கட்டடத்தை இடிக்க பரிந்துரை செய்யலாம். உரிய அரசாணை (நிலை) எண். 56, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அ.தி–4) துறை, நாள்.3.04.2008–ல் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றி கட்டடத்தை இடிக்க செயற்பொறியாளர் (ஊ.வ) உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். ஒரு புதிய பள்ளி கட்டடம், ஒரு புதிய சமையலறை கட்டடம் அல்லது கழிப்பறை தேவைபடின் இத்திட்டத்தின் கீழ் எடுக்கலாம். போதுமான நிதி இல்லையெனில் புதிய கட்டடங்கள் கட்ட பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் அல்லது இதர பிற திட்டங்களின் நிதிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தலாம்.

**4. தேர்வு செய்யப்பட்ட பணிகளை சரிபார்த்தல்**

இந்த வருடம் மதிப்பீடு தயாரிக்கும் நிலையில், ஆரம்பம் முதல் முறையான கள ஆய்வு மேற்கொண்டு, தேர்வு செய்யப்பட்ட பணிகளை சோதனை முறையில் சரிபார்த்து பணிகளை மேற்கொண்டால், சரியான மதிப்பீடு தயாரிக்க ஏதுவாயிருக்கும். 2015–16ம் ஆண்டு தாய் திட்ட கிராமங்களில் உள்ள பள்ளிகளை மட்டுமே இத்திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்வதால் விரிவான சோதனை முறை சரிபார்ப்பை மேற்கொள்வது கடினமாக இருக்காது. சோதனை சரிபார்த்தல் பணி மேற்கொள்ளப்படும்போது கீழ்கண்டவைகள் உறுதி செய்யப்பட வேண்டும்.

i. பணிகளில் ஏதாவது தேவையான இனம் தவறுதலாக விடுபட்டுள்ளதா
ii. பணிகளில் தேவையில்லாத இனம் தவறுதலாக சேர்க்கப்பட்டு உள்ளதா

iii. விரிவான மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளதா

iv. பழுது பார்த்தல் பணிகளின் மதிப்பீடு அதிகமாயிருப்பின் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளை முழுமையாக ஆய்வு செய்தல்.

v. இத்திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்படாத இனம் எதுவும் சேர்க்கப்படவில்லை.

தேர்வு செய்யப்பட்ட பள்ளிகளின் சோதனை சரிபார்ப்புப்பணியை கீழ்க்கண்ட அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர் | – | 10% |
| 2. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை | – | 20% |
| 3. | செயற்பொறியாளர் (ஊ.வ) | – | 20% |

பள்ளிகளில் சோதனை சரிபார்ப்பு பணி 100 சதவீதம் உதவி இயக்குநர் நிலை அலுவலர் / உதவி செயற்பொறியாளர் (ஊ.வ) மூலமாக மேற்கொள்ள வேண்டும்.

**5. நிர்வாக அனுமதி**

மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நிர்வாக அனுமதி வழங்கப்பட வேண்டும். நிர்வாக அனுமதி வழங்கும் முன் நிர்வாக அனுமதிக்கான ஒவ்வொரு கருத்துருக்களுடன் கீழ்க்கண்ட ஆவணங்கள் உள்ளனவா என உறுதி செய்து கொள்ள வேண்டும்.

1. பத்தி 3–ல் குறிப்பிட்டுள்ளவாறு தேர்வுக்குழுவிலுள்ள உறுப்பினர்களின் கையொப்பமிடப்பட்ட "மதிப்பீட்டுத் தாள்."
2. பத்தி 4–ல் குறிப்பிட்டுள்ளவாறு, மாவட்ட அளவிலான அலுவலர்களால் உரிய சோதனை சரிபார்ப்பு சதவீதம் மற்றும் உதவி இயக்குநர் / உதவி செயற்பொறியாளர் நிலையில் 100% சோதனை சரிபார்த்தல் ஆகியவற்றை திருப்திகரமாக நிறைவு செய்ததை உறுதி செய்தல்.
3. ஒவ்வொரு பணிக்கும் விரிவான மதிப்பீடு எத்தகைய நிலையிலும் தோராய மதிப்பீட்டுடன் கருத்துரு அனுப்புதல் கூடாது
4. பள்ளி கட்டடம் / சமையலறைக்கூடம் / கழிப்பறை கட்டடங்களின் உள் மற்றும் வெளிப்புறத் தோற்றத்தின் பல்வேறு புகைப்படங்கள் மதிப்பீட்டுடன் இணைக்கப்பட வேண்டும். புகைப்படங்கள் இணைக்கப்படவில்லை எனில் மாவட்ட ஆட்சித்தலைவர் நிர்வாக அனுமதி வழங்க கூடாது.

குறிப்பு –

வேலைகளின் எண்ணிக்கையை உறுதி செய்யும் நோக்கத்திற்காகவும் அல்லது வேலைகளின் விரிவான மதிப்பீடுகள் பெறவும் பணிகளை கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

- ❖ ஒரு பள்ளி வளாகத்திற்குள் உள்ள அனைத்து பள்ளி கட்டடம் / வகுப்பறை, பழுது பார்ப்பதை ஒரு வேலையாக எடுத்துக் கொள்ளலாம்.
- ❖ ஒரு பள்ளியிலுள்ள அனைத்து கழிப்பிடங்களையும் பழுது பார்ப்பதை ஒரு வேலையாக எடுத்துக் கொள்ளலாம்.
- ❖ ஒரு பள்ளியிலுள்ள சமையலறையின் அனைத்து பழுதுகளையும் பழுது பார்ப்பதை ஒரு வேலையாக எடுத்தக் கொள்ளலாம்.
- ❖ ஒரு பள்ளியில் பழுது பார்க்கப்படும் அனைத்து தண்ணீர் வசதிக்கான அனைத்து வேலைகளையும் ஒரு வேலையாக எடுத்துக் கொள்ளலாம்.
- ❖ புதிய வகுப்பறை கட்டுதல் / பள்ளி கட்டடம் கட்டுதல் தனியாக / ஒரு வேலையாக எடுத்துக் கொள்ளலாம்.
- ❖ புதிய கழிப்பறை கட்டுவதை தனி / ஒரு வேலையாக எடுத்துக் கொள்ளலாம்.
- ❖ புதிய சமையலறைகூடம் கட்டுவதை தனி / ஒரு வேலையாக எடுத்துக் கொள்ளலாம்.
- ❖ புதிய குடிநீர் இணைப்பு வேலை மற்றும் மழைநீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் தேக்கத்தொட்டி தனி / ஒரு வேலையாக எடுத்துக் கொள்ளலாம்.
- ❖ புதிய சுற்றுசுவர் கட்டுதல் தனி / ஒரு வேலையாக எடுத்துக் கொள்ளலாம்.

**எடுத்துக்காட்டு**

ஒரு பள்ளி வளாகத்திற்குள் 2 பள்ளி கட்டடங்கள், 2 கழிப்பறைகள், 1 சமையலறை கூடம் ஆகியவற்றை பழுது பார்த்தல் மற்றும் ஒரு புதிய பள்ளி கட்டடம், 1 புதிய கழிப்பறை , 1 புதிய குடிநீர் பணிகள் எடுக்கும் பொழுது கீழ்க்கண்டவாறு பணிகளின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யலாம்.

| | |
|---|---|
| பள்ளி கட்டடம் பழுதுபார்க்கும் பணி | –1 |
| கழிப்பறை கட்டடம் பழுதுபார்க்கும் பணி | –1 |
| சமையலறை கட்டடம் பழுதுபார்க்கும் பணி | –1 |
| புதிய கட்டடம் | –1 |
| புதிய கழிப்பறை மற்றும் | –1 |
| புதிய குடிநீர் பணி | –1 |

இவ்வாறாக அவ்வளாகத்திற்குள் மொத்தமாக 6 வேலைகள் எடுக்கப்பட வேண்டும்.

**6. வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி**

வேலைகள் ஒப்பந்தப்புள்ளி முறை மூலமாக நிறைவேற்றப்பட வேண்டும். ஒரு பள்ளிக்குள் மேற்கொள்ளப்படும் அனைத்து பராமரிப்பு / பழுதுபார்த்தல் பணிகளும் ஒப்பந்தப்புள்ளி கோரும் செயல்முறைக்காக ஒரே வேலையாக கருதப்படும். உதாரணமாக ஒரு பள்ளிக்கட்டடம் பழுது பார்த்தல், ஒரு கழிப்பறை கட்டடம் பழுது பார்த்தல், ஒரு சமையலறை கூடம் பழுது பார்த்தல் பணி ஆகியவை ஒரே தொகுப்பாக (package) எடுக்கப்பட்டு அத்தொகுப்பிற்கு ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டும். பள்ளிகட்டடம், சமையலறை கூடம், கழிப்பறை கட்டுதல் பணி புதிய பணிகளாக இருப்பின் தனி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட வேண்டும். 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவு மறைவு அற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் மற்றும் விதிகள் 2000–ன்படி ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, அரசாணை நிலை எண்.203, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (ப.ராஜ் 1) துறை நாள்.20.12.2007–ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு ஊராட்சிகள் (வேலையின் வரைபடம் தயாரித்தல் மற்றும் வேலையின் மதிப்பீடு தயாரித்தல் மற்றும் மாதிரி ஒப்பந்த நிபந்தனைகள்) விதிகள் 2007 அட்டவணை 1–லுள்ள அறிவிக்கை II –ல் தெரிவித்துள்ள முன்னேற்பாடுகளை பின்பற்றி செயல்படுத்தப்பட வேண்டும்.

**7. நிதி வழங்குதல்**

மொத்த ஒதுக்கீடான ரூ.100 கோடியில் 99 விழுக்காடு அதாவது ரூ.99 கோடி, மாவட்டங்களிலுள்ள ஊராட்சி ஒன்றியம் துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளிகள் விகிதாச்சார அடிப்படையிலும், வேலைகளின் உண்மையான மதிப்பீடுகளின் அடிப்படையிலும் சரிசமவீதப்படியாக மாவட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்ட நிதிக்காக தொடங்கப்பட்ட தனி வங்கி கணக்கில் இந்நிதியை பற்று வைக்கப்பட வேண்டும் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையில் மாவட்ட அளவில் இத்திட்டத்திற்கென துவங்கப்பட்ட தனி வங்கி கணக்கில் நிதியை பராமரிக்க வேண்டும். வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் தனி கணக்கு ஒன்றை பராமரிக்க வேண்டும். மாவட்ட ஆட்சியர், ஒவ்வொரு வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கும், வட்டாரத்திற்கு அனுமதிக்கப்பட்ட பணிகளின் அடிப்படையில் தொகையினை மறு ஒதுக்கீடு மூலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரால் சம்பந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலகங்களுக்கு நிதி விடுவிக்கப்பட வேண்டும். அனைத்து வங்கி கணக்குகளும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் தொடங்கப்பட வேண்டும்.

மொத்த ஒதுக்கீட்டில் 1 விழுக்காடு அதாவது ரூ.1 கோடி செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மேற்படி தொகையில் ரூ.25 இலட்சம் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககத்திற்கு செய்தி, கல்வி மற்றும் தகவல் தொடர்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும். மீதமுள்ள ரூ.75 இலட்சம் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படவேண்டும்.

**8. ஆவணப்படுத்துதல்**

இத்திட்டத்தில் வேலைகளை அடையாளம் காணுதல் முதற்கொண்டு, அதனை முடிக்கும் வரையிலான அனைத்து விரிவான, பலவிதமான நிலைகளிலும் ஆவணங்கள் தயாரிக்க வேண்டும். வேலை முடிக்கப்பட்ட பின்பு, அதாவது பள்ளி உட்கட்டமைப்பு வசதிகள் முடிவுற்ற பின்னர் இத்திட்டத்தின் பெயர், ‘‘ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்’’, கட்டடம் கட்டுவதற்கு / புதுப்பித்தலுக்கு செலவிடப்பட்ட தொகை போன்ற விவரம் கட்டடத்தின் ஒரு பகுதியில் முக்கியமாக தமிழில் எழுதப்பட வேண்டும்.

**9.** இத்திட்டத்திற்கு கூடுதல் நிதி கோரப்படமாட்டாது என்பதுடன் மாவட்ட ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராம ஊராட்சிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியின் உள்விகிதாசாரம் மாற்றப்படமாட்டாது எனும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளில் அவ்வப்போது ஏற்படும் உடனடி தேவைக்கேற்ப, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரை கலந்தாலோசித்து, தேவையான மாற்றங்களை செய்ய அரசு செயலர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

ககன்தீப் சிங் பேடி,
அரசுச் செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.